340

உ

சிவமயம்.

விருதுநகர் இந்து நாடார்களுக்குப் பாத்தியமான
கச்சைகட்டி திருவண்ணுமலை நாடாரவர்கள் கட்டிவைத்த
பாலசுப்பிரமணியசுவாமி கோவில்வகையரு தேவஸ்தானம்

ஆலயத்திருப்பணி

# யானை மரணச் சிந்து.



இஃது

கோவில்பட்டி தாலூகா, குளத்தூர்
மகா-ா-ா-ஸ்ரீ சு. ரா. சின்னச்சாமிக் கவிராயர் அவர்கள்
பிரதம சீடர் வ. முத்துலிங்கபுரம்
மு. புகழ்கருப்பையா நாடார் அவர்கள் இயற்றி

விருதுநகர் பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது

1943

O-,1 MPK 7,4
N43.
172713

## முன்னுரை.

பல்வளம் நிறைந்து, சலசமாதுரையும் இவ்விருதுமாநகரில் ஜெகன்மாதாவாகிய ஸ்ரீவெயிலுகந்தம்மன் திருப்பணிக்காக மைசூரிலிருந்து கர-ஆடு புரட்டாசி-மீ 17உ இந்தப் பிரபல யானை கொண்டுவரப்பெற்றது. வரும்போது சுமார் 5 வயதுள்ளதாகையால் மொத்தம் 58 வயதுடையதாகும். நல்ல தெய்வபக்தியும் சற்குணமும் அழகும் நிறைந்தது. ராஜசபைகளிலும் ஜமீந்தார்களிடமும் தேவாலயங்களிலும் ஆனையே முன்னணிச்சிறப்பு வாய்ந்தது. என் போர்க்களங்களிலும் இஃதில்லாவிடில் சிறப்பும் ஊக்கமும் ஏற்படாது. ஸ்ரீமகாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடனும் ஸ்ரீராமனுக்கு தூதனும் வாகனமுமாகவும் நின்ற ஆஞ்சநேயரும் பாடல்கள்பெற்றது போல் ஈஸ்வரிக்கு திருத்தொண்டு பல்லாண்டுகளாய் புரிந்து வந்த இவ்வானையும் பாடல் பெறுதற்கு உரித்தேயாகும். இப்புனித காரியத்தை தெய்வபக்தி மிகுந்தவரும் ஸ்ரீஅம்பிகை மாரி வெயிலுகந்தாளுக்கு வருடாவருடம் 21 அக்கினிச்சட்டி பிரார்த்தனை செலுத்துபவரும் சோகாமேளர் என்ற படத்தில் தோன்றி மேற்கூறிய இருபத்தோறு அக்கினிச் சட்டியேந்தி நம்மை மகிழச் செய்தவரும் எனது ஆப்தநண்பர் மகா-ா-ா-ஸ்ரீ சின்னச்சாமிக் கவிராயர் அவர்களின்பிரதமமாணவரும் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ மு. புகழ்கருப்ப நாடார் அவர்கள் ஏற்று, பாடல் ரூபமாக புத்தகம் அச்சியற்றமுன்வந்தது மேச்சத்தகுந்ததே. பாடல்கள் மிகுந்த லட்சணபொருள்கள் விளங்கி படிப்போர்களுக்கு மனதில் பதியுமாறு எதுகை மோனை விளங்கி அலங்காரமாக அமைந்துள்ளதென்பதை வாசிக்கும் நண்பர்களறிவர். ஆகவே இச்சிறு நூலை வாங்கி அன்பர்கள் ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்

கல்விப்பிரியன்

*தே. சு. ச. ராமசாமி நாடார்*

உ

சிவமயம்.

இராமநாதபுரம் ஜில்லா, சாத்தூர் தாலூகா,
விருதுநகர் இந்து நாடார்களுக்குப் பாத்தியமான
கச்சைகட்டி திருவண்ணாமலை நாடார் அவர்கள் கட்டிவைத்த
பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் வகையரு தேவஸ்தானம்

## ஆலயத் திருப்பணி

# யானை மரணச் சிந்து.

விருத்தம்.

அயில்கரந்தன்னில் தாங்கி ஆழிவாகனத்தின்மீது
ஒயிலுடன் விருதூர்தன்னில் உகந்துவீற்றிருக்கும் அன்னை
வெயிலுகந்தாளின் சேவை வேண்டியே செய்துவந்த
கயமதின் மரணம் சொல்ல கயமுகன் துணையுண்டாமே.

சிந்து.

அநியாயம் பாரீர் ஆனை மடிந்திட்ட
விதி மோசம் கேளீர்

வினையகற்றிடவந்த      வெயிலுகந்தாள் வாழும்
விருதுநகர்தன்னில்      வேண்டியே வெகுகாலம்
ஆனை திருப்பணி பூண்ட      ஆனைக்கந்தியகாலம்
ஆனதோ ஆண்டவன்      சோதனையோ போலும்
அந்தோ ஓர்மாயம்      கால்கொஞ்சமிடறியே
வந்ததே காயம்

சிந்தைமகிழ்ந்துமே      தேவாலயத்தார்கள்
திரண்டு கைப்பக்குவ      மருந்தையும் கொடுத்தார்கள்
வந்தபுண் வலுத்தது      வைத்யரை அழைத்தார்கள்
வகைவகை மருந்துகள்      மறுக்காமல்கொடுத்தார்கள்
மதிமிகுந்தவர்தான்      ஆனாலுமே ஊழின்
விதிவெல்ல எவர்தான்

இதுஎன்ன சோதனை யென்றெண்ணிப்பார்த்தார்கள்
இங்கிலீஷ் டாக்டர்களிடம் சென்றுகேட்டார்கள்
அதிசய குணஊசி அதையுமே போட்டார்கள்
ஆரூடம் சோதிடம் ஆயுளும் பார்த்தார்கள்
அப்புறமுணர்ந்தார் தாய்செயலிதுவென்று
அனைவரும் தெளிந்தார்

அறுபத்தொரு வருடம் அமர்ந்து வளர்ந்த யானை
அழும்பிள்ளை முதலாக தொடுங்குணமுள்ள யானை
இருபத்தாறுஜில்லாவில் இதைப்போலில்லா யானை
இணையில்லாத பெண்யானை அழகுமிகுந்தயானை
இடர்நீங்கவேண்டும் என்று ஜனங்களெல்லாம்
கடவுளை வேண்டும்

கடகரிஇதற்குமே கால்வலி மிகுத்தது
காளிகாளி என்று கதறித்துடித்தது
கடல்முத்துப் போலவே கண்ணீரை வடித்தது
காலுடன் துதிக்கையை மடக்கியேபடுத்தது
கவலைக்குள்ளாச்சு அடிக்கடி சோர்வாக
வாட்டுது மூச்சு. (1)

———

கட்டபொம்மு மெட்டு.

இந்தவிதமாக ஆனையது எண்ணில்லாக் கஷ்டமடைந்துவர
அந்தவகையை மதிக்காமல் ஆனையின்பாகர்களேது செய்தார்
ஸ்ரீரெங்கநாதர்க்கு தோத்தரிக்கும்
திருவிழா வந்தது என்றுசொல்லி
அருமையுடனே வழக்கம்போலே
அழைத்துச்சென்றார்கள் ஆனையிதை
கால்வலிமெத்தச் சகிக்காமல் கடமையைச் சற்றும் மறக்காமல்
ஊழ்வினையாமென்று நொண்டிநொண்டி
ஊர்சுற்றி வந்து படுத்ததையா

அன்றுமுதற்கொண்டு வேதனைகள் அதிகரிக்கவு மாச்சுதையா
தெண்டனிட்டு மாரித்தாயே என்று
திக்குமுக்காடவு மாச்சுதையா

மங்களமாகவளர்த்துவந்த மாவுத்தனும்கொஞ்சம்யோசித்துமே
திங்களணிந்த சிவன்பாதம் சேருந்தருணமென்றே நினைந்து

மாதங்கம்போல்வந்த மாதங்கமே வாடாதே அஞ்சிமலைக்காதே
மாதங்கன்உன்னையழைக்கவந்தான்
வாதங்கள்செய்ப யாரால்முடியும்

சிந்தூரம்போல்வந்த சிந்தூரமே சிந்தாதே கண்ணீர்வருந்தாதே
சந்திரசேகரன் வந்தழைத்தால்
தர்க்கங்கள்செய்ய யாரால் முடியும்

தந்திபோல் மைசூரிலேயிருந்து
தந்தியேஉந்தனைக் கொண்டுவந்தோம்
தந்திமுகன் றந்தை வந்தழைத்தால்
தடுத்துச்சண்டை தொடுப்பவர்யார்

கும்பியேகும்பியே நான் சொல்லக்கேள்
கும்பிகொதித்துப் புலம்பாதே
எம்பிரானுன்னைத் துணையழைத்தால்
எதிர்த்துச்சொல்பவர்யாருமுண்டோ

கயத்தில் முதலைவாயில்பட்டு காத்தருள்வாய் ஆதிமூலமென்ற
கயத்தைக் காத்தமுகுந்தனுண்டு கயமேநீயுங் கலங்காதே

நாகம்போலேநீண்ட நாகமேகேள்
நாகாபரணன் உனையழைத்தான்
யோகமுனக்கிங்குவாய்த்ததுவே யோசிக்காதேயிந்தநேரத்திலே

என்றுசொல்லிப்பாகன் தேற்றிடவே
ஈசனையானை மனதிலெண்ணி
நன்றுஇம்மானில ஆசையது நமக்குநீங்கியதென்றுஎண்ணி

துதிக்கைநீட்டியே தோத்தரிக்கும்
துள்ளித்துள்ளிப் புரண்டெழும்
மதித்திருசெவியாட்டிக்கொண்டு வாதனைப்பட்டது வாரணமே
இந்தச்செய்திநகரத்திலே எங்கெங்கும்நன்றாய்த்தெரிந்தையா
விந்தைமிகுந்த சிறுவர்களும் விரைந்து ஆடவர் மாதர்களும்

பரிதாபக்காட்சியைப் பார்க்கவென்று
பச்சைக்குழந்தைக்குப் பால்கொடுத்த
அருமைமிகுந்த தாய்மார்களெல்லாம்
அப்படியேதூக்கி ஓடிவந்தார்

க்ஷத்திரியவித்தி யாசாலை தன்னில்வகுப்பு நடக்கும்போது
அத்தியவஸ்தையைகேட்கவுமே அனைவரும் அங்கேஓடிவந்தார்

ஓங்கியே வர்த்தகம்செய்பவரும்
உண்மைசேர்கைத்தொழிலுள்ளவரும்
தூங்கலின்கஷ்டத்தைக்கேள்வியுற்று
சுருக்குடன் ஓடிவந்தார்கள்

ஆனைக்குக்கண்ணீர் துடைப்போரும்
அன்பாய்முதுகைத் தடவுவோரும்
வேணகற்பூரப்புகை காட்டி மிஞ்சும்உபசாரம் செய்பவரும்

சாம்பிராணிப்புகை காட்டுவோரும்
சைகையாலஞ்சாதே என்போரும்
தேம்பி அழுத்தாமல் வைக்கோலை
தேகத்தில் சுற்றி அணைப்போரும்

தூங்கலே நீமலைபோலிருந்து தூங்கல்போலானாயே என்பாரும்
ஓங்கும்சதாசிவன் பாதசேவை உனக்குக் கிட்டியதென்பாரும்

தோலே நீபனைபோலிருந்து தோல்போலானது வாழ்வலியோ
மேலோங்குமுந்தன் கஷ்டமெல்லாம்
விலகாதோஎன்று சொல்வாரும்

இப்படிவாய்விட்டுத் தான்கதறி ஏகமாகச்சனம் கூடியது
எப்படியாயினும் அன்றமைத்த ஈசன்செயலதை யார்தடுப்பார்

வந்தபிணியது ஓங்கியது மத்தகம்மெத்தத் தியங்கியது
விந்தையென்றெண்ணும்படியாக
மேல்மூச்சுவந்து இழுத்ததையா

ஆயிரத்துநூற்றுப்பத்தொன்பது ஆண்டுசுபானுவருஷத்திலே
நேயமாய் ஆவணிமாதத்திலே
நீண்டதோர் முப்பதாந்தேதியிலே

இரவுமணி பதினொன்றதிலே எல்லாச்சனங்களும் பார்த்திருக்க
இரவுநிறங்கொண்ட யானையது ஈசன்திருவடியெய்தியதே (2)

## வசனம்.

யானை மரணமானதும் நகர் மாந்தர்கள் பரிதாபப்படுவதும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதும்.

### சாதி ஏதையா-என்ற மெட்டு.

ஆனை மடிந்ததையா — பெரும்
அதிசயமிதுவையா — நம் (ஆனை)

வானவர்கோன்தே வேந்திரன் ஐரா
வதமென்றிடு யானை
வடிவழகதுவும் இதுபோலுண்டோ
மதிமிகு நம் யானை — நம் (ஆனை)

மைசூர் நகரந் தனிலிருந்திங்கே
வரப்பெற்று வளர்த்ததுவாம்
வருடமும் சொல்வேன் கரபுரட்டாசி
வளர்தெய்தி பதினேழாம் நம் (ஆனை)

கல்யாணமொன்றுக்கு இரண்டரைரூபாய்
காணிக்கைபெறும் யானை
கால்ரூபாய் படி யரிசி மாவுத்தனுக்கு
கணக்குத் தந்திடும் யானை- நம் (ஆனை)

வளவளப்பில்லாமல் கணீர்கணீரென்று
மணியடிக்கிடும் யானை
மாவுத்தன் அய்யநா டானுக்குப்பணிந்துமே
மதிப்புக் தந்திடும்யானை— நம் (ஆனை)

க்ஷத்ரியவித்தியா சாலையமைக்க
தந்த அதிர்ஷ்டயானை
தண்ணீர்வளமும் செல்வவளங்களும்
தழைக்கச்செய்திட்டயானை நம் (ஆனை)

குழந்தைகுட்டிகளுடன் கலங்கமில்லாமல்
கொஞ்சிடும் பெண் யானை
முழக்குப்தேவாலய உற்சவமனைத்துக்கும்
முன்னேவரும் யானை — நம் (ஆனை)

சங்கை யில்லாமல் தும்பிக்கையதிலே
சங்கிலி பெறும் யானை
தங்கப்பணியொடு குங்குமம் முகத்திலே
தங்கும் சுந்தர யானை — நம் (ஆனை)

அயில்கரமேந்திய வெயிலுகந்தாளுக்கு
அடிபணிந்திடும் யானை
மயில்வாகனமுள்ள வடிவேலவருக்கு
வந்தனம்செய்யும் யானை— நம் (ஆனை)

தாரணியோர் புகழ் மாரியம்மாளுக்கு
தாள் பணிந்திடும் யானை
வாரியில் துயின்றிடும் ஸ்ரீரெங்கநாதர்க்கு
வணக்கஞ் செய்திடும்யானை நம் (ஆனை)

தேங்காய்க் கடையில் பாங்காய்நடந்துமே
தெட்சணை பெறும் யானை
ரீங்காரத்தொடு கடைசியில்பாகர்க்கு
நீட்டும் துதிக்கை யானை— நம் (ஆனை)

பழக்கம் போலவே பழக்கடையதிலே
பழமது பெறும் யானை
வழக்கம்போலே கடைசியில் பாகர்க்கு
வாங்கித் தந்திடும் யானை — நம் (ஆனை)

அப்பன் திருப்புக ளாலயமதில்போ
யானந்தம் பெறும் யானை
ஆடியிலே குரு பூசையிலே சென்று
அன்னமருந்தும் யானை — நம் (ஆனை)

வள்ளியக்காள் கடை யதிலே தினந்தினம்
மகிழ்ந்து சென்றிடும் யானை
அள்ளிக்கொடுக்குமவல் கடலைகள்வாங்கி
அருந்திடும் நம் யானை — நம் (ஆனை)

பொதுவாய் நமது நகரினில்முன்செய்
பூசாபல யானை
இதுவேயாம் சின்னச் சாமியின்பாடல்
இசைக்குத்தகுந்த யானை-- நம் (ஆனை)

## கட்டபொம்மு மெட்டு.

இவ்விதமாகச்சனங்களெல்லாம் இரக்கமுற்றுமே பேசிநின்றார்
செவ்வையாக மறுதினத்தில் செப்பும் வியாழக்கிழமையிலே
எல்லோரும் பார்த்திடவேண்டுமென்று
யெடுத்துப் பொட்டலில் வைத்திடவே
வல்லமையாகிய ஆனையிதை வந்துதெரிசித்த பேர்கள்தனை
இத்தனையென்று கணக்கிடவோ என்னால் சொல்லமுடியாது
அத்திமரணத்தின் காரணத்தால்
அத்தனைகடையும் பூட்டிவிட்டார்
ஆனைஎப்போதுமே நின்றதுபோல்
அலங்காரமுடன் தூக்கிவைத்து
வேணதோர் கஸ்தூரிஅத்தர்களும் மிகுந்த வாசனைசந்தனங்கள்
பன்னீரெல்லாம் தெளித்தனர்கள் பாரமலைபோலேபுஷ்பங்களை
நன்னயமாகவேசூட்டிவைத்தார் நல்லரதத்திலே தூக்கிவைத்தார்
தேவதுந்துமிபோலாக சீர்பெறுமேள வகையதனை
நாவாலேசொல்லமுடிந்திடுமோ ராஜமேளம்பாண்டுவாத்தியங்கள்
தம்பட்டம்பேரி தவில்முரசு தாம்தாமென்று முழங்கிவர
ஓர்பக்கம் உண்டியலேந்திக்கொண்டு
ஒலித்துக் கணீர்கணீரெனவே
நேர்பெற்றபுண்ணியங்கைகூடும்
நீங்கள்காணிக்கைகள் போடுமென்பார்
ஆனைமீது பக்திகொண்டாடி அனேகம்பேர் பட்டுவஸ்திரமும்
தானமதாக விலையுயர்ந்த சவளிசேலைகள் தட்டில்வைத்து
மேளதாளங்கள் முழக்கத்துடன்
மேவியேபின்னால் தொடர்ந்துவந்தார்
புலியின்வேடங்கள் போட்டுக்கொண்டு
போர்பெறும் சிலம்புவீசிவர
அலைகடல்போல் சனங்களெல்லாம்
அக்கம்பக்கத்தினில் சூழ்ந்துவர
பெரியகடை வீதிவழியாக பேர்பெற்ற யானைபவனிவந்து
திறமுடன்தெற்குள்ள வீதிவந்து
தேவமார்தங்கள் தெருவும்வந்து

வெயிலுகந்தாள் திருக்கோவில்சுற்றி
மீண்டும் பெரியகடைவழியே
ஆடம்பரத்துடன்சுற்றிவந்து அப்படியேசாத்தூர் ரோட்டுவழி
சென்றுமண்பாலத்தின் தெற்கினிலே
திரண்டஆழக்குழிதோண்டி
கொண்டு அடக்கங்கள் செய்தாரே குவலயத்திலுள்ளோர் புகழ
அம்பிகைவாழ்கயானைவாழ்க அனைவரும்வாழ்கஇம்மானிலத்தில்
செந்தமிழோதிடும் சின்னச்சாமி சீடன்புகழ்கருப்பன் வாழ்க.

---

எங்கும் புகழ்பெற்ற-என்ற தெம்மாங்கு மெட்டு.

ஆனையே நீமரணம் அடைந்தாயோ
ஆதிசிவன் பாதமதைத் தொடர்ந்தாயோ (ஆ)

1 வானையளாவிநிற்கும் மாடமணி மாளிகைசூழ்
வேணபல செல்வம்பொங்கும் விருதுநகர்தனில்வளர்ந்த (ஆ)

2 காலமதிலே புகழும் காயான வெயிலுகந்தாள்
ஆலயத்தில் திருப்பணியாய் அதிககாலம் வாழ்ந்துவந்த (ஆ)

3 மங்களஞ்சேர் கரவருடம் மாதம் புரட்டாசியிலே
பொங்கும் பதினேழாந்தேதி புகழ்பெற நீஇங்குவந்தாய் (ஆ)

4 வளருர் சுபானுவென்ற வருடம் ஆவணி முப்பதில்
விளையும் புதன்கிழமையிலே மேலுலகஞ்சென்றனையோ (ஆ)

5 மாசற்ற குணமுடைய மாரியப்பத் தேவரென்ற
மாவுத்தரிடந்தனிலே வணக்கமுடனே நடந்த (ஆ)

6 மங்காதபழக்கடைக்கு மாங்காய்தேங்காய்க்கடைக்கு
எங்கள்மாரியப்பனைநீ ஏற்றிக்கொண்டு வருவதெப்போ (ஆ)

7 உன்மேல்விஸ்வாசமொடு உயிர்போன்ற பாகனென
இன்பமுள்ள கருப்பையாவை எங்ஙவிதம் நீமறந்தாய் (ஆ)

8 பக்தியின்றி குளிக்காமல் பண்டாரம் தொடவந்திட
எத்தித்து திக்கையாலே எடுத்தெறிந்த உண்மையான (ஆ)

9 கார்த்திகைக்கு கார்த்திகைக்கு கந்தனென்ற சுப்ரமண்யர்
சேர்த்தியுடன் பவனிவர நீமுன்னாலே வருவதெப்போ (ஆ)

10 ஆடியமாவாசையிலே அப்பன் திருப்புகட்கு
தேடிச்செய்யுங்குருபூசையில் சிந்துரமேவருவதெப்போ (ஆ)

11 கடவியுன்னைக் குளிப்பாட்டி தண்ணீரில் நிற்கையிலே
கடகரியே வாவென்றுன்னை
கருப்பையாவும் அழைப்பதெப்போ (ஆ)

12 வத்தல்கடை சோமவாரம் மதிப்புடனே நடத்தும்போது
அத்தியேநீமுன்னோடி அழகாகவருவதெப்போ (ஆ)

13 செந்தமிழ்சொல் சின்னச்சாமி சீடன்புகழ் கருப்பன்
சிந்தனைக்கேள்வியுற சிந்துரமே வருவதெப்போ (ஆ)

———

சுபம்

விருதுநகர் தெப்பக்குளத்துக்கு வடபக்கமுள்ள விநாயகர் கோவில்

**பெட்டிக்கடையை ஆதரியுங்கள்.**

புரோப்ரைட்டர் : சண்முக நாடார்.

---

தெப்பக்குளத்துக்கு மேல்பக்கத்திலுள்ள வடிவேல் நாடார் கடை

**பொடியை வாங்கி ஆனந்தமடையுங்கள்.**

---

முக்கூடலிங்கம் துணை.

**சாப்பாடு அணா 2**



**சாப்பாடு அணா 2**

வாருங்கள் ! அனைவரும் வாருங்கள் !!

எங்கே ? எங்கே ? எங்கே ?

**டவர் கடியாரம் கீழ்பக்கமுள்ள**

# ராஜா கிளப்

**சாப்பாடு ஹோட்டலுக்கு** விஜயம் செய்யுங்கள்.

---

சம்பாஷணை.

கமலா—பாப்பா ! இதுதானு விருதுநகர் ஸ்டேஷன், இறங்கி ஊர்வலம் பார்த்துச் செல்வோம்.

பாப்பா—கமலா ! வயிறு பசிக்கிறதே.

கமலா—பாப்பா ! பசித்தால் இதோ ஐந்து ராந்தலுக்குக் கீழ்பக்கம் ராஜா கிளப்பு என்று போர்டு இருக்கிறது, அதில் போய் சாப்பிடுவோம், வா.

பாப்பா—கமலா ! சாப்பாடு நன்ருயிருக்குமா ?

கமலா—பாப்பா ! சாப்பாடு அணா 2 என்று எழுதியிருக்கிறதே !

பாப்பா—கமலா ! அப்படியானுல் சாப்பிடுவோம், வா.

கமலா—பாப்பா, சாப்பாடு என்ன அருமை, வெகு நேர்த்தி.

பாப்பா—கமலா எந்த ஊர்களிலும் இப்படி சாப்பாடும், பொரிக்கறியும் நான் பார்த்ததுமில்லை, இவ்வளவு நேர்த்தியாக இருந்ததுமில்லை, வெகு அருமை.

கமலா—பாப்பா, சரி ரெயிலுக்குச்செல்வோம், வா, நேரமாகிறது.